# ஸ்ரீமத் பாகவதம் புத்தகம் அறிவிப்பு

ஸ்ரீஹரிவாயு குருகளின் அனுக்ரஹத்தால் முதன்முறையாக தமிழில் முழுமையான ஸ்ரீமத் பாகவதம் அனைத்து ஸ்லோகங்களின் அர்த்தத்துடன் ஸப்தாஹ க்ரமத்தில் ஏழு புத்தகங்களாக தயாராகிக் கொண்டிருக்கிறது என்பது நீங்கள் அறிந்ததே.

சென்ற இதழில் இந்தப் புத்தகத்திற்கு ரூ.800 அனுப்பி பதிவு செய்யும்படி கேட்டுக் கொண்டிருந்தோம். அனுப்பியவர்கள் அனைவருக்கும் உரிய ரசீது அனுப்பப்பட்டுள்ளது. ரசீது கிடைக்காதவர்கள் உடனேயே எங்களை தொடர்பு கொண்டால் மட்டுமே புத்தகம் அனுப்ப இயலும் என்று தெரிவித்துக் கொள்கிறோம். கொரியர் செலவு குறித்து பிறகு தெரிவிப்பதாகக் கூறியிருந்தோம். கொரியர் செலவு-தமிழ்நாட்டுக்குள் ரூ. 200, கர்நாடகா-ரூ.300, மும்பை, டெல்லி போன்ற வட மாநிலங்களுக்கு ரூ.500. ஏற்கனவே புத்தகத்திற்கு ஒரு வருடத்திற்கு ரூ. 600 அளித்து பதிவு செய்தவர்களுக்கு நாங்கள் அறிவித்தபடியே எங்கள் செலவில் புத்தகத்தை அனுப்பி வைக்கிறோம். இரண்டு மாதத்துக்கு முன்பு ரூ. 800 அனுப்பியவர்கள் தயவு செய்து கொரியர் பணம் அளித்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். புத்தகம் வேண்டுபவர்கள் கொரியர் சார்ஜுடன் எங்களுக்கு தங்களுடைய முழுமையான முகவரி, பின் கோடு, போன் நம்பருடன் தெரிவிக்கவும். பணம் அனுப்புபவர்கள் Phonepe மூலம் பணம் அனுப்பலாம். எண். 94454 60939. ஆன்லைனில் பணம் அனுப்ப வேண்டாம். ஆன்லைனில் பணம் அனுப்புவதாக இருந்தால் உங்களிடமிருந்து சரியான முகவரியை இமெயில் மூலமோ அல்லது வாட்ஸ்அப் மூலமோ தெரிவிக்க வேண்டும். இல்லையெனில் எங்களால் உங்களை தொடர்பு கொள்ள இயலுவதில்லை.

வாசகர்களே! இந்த அருமையான புத்தகத்திற்கு உங்களால் இயன்ற உதவி செய்யுமாறு சென்ற இதழிலும் கேட்டிருந்தோம். ஸ்ரேஷ்ட புராணமான பாகவதத்தில் ஒரு ஸ்லோகமோ, அரை ஸ்லோகமோ கேட்டாலோ, படித்தாலோ, படிக்க வைத்தாலோ அனந்த புண்யம் என புராணங்கள் பறைசாற்றுகின்றன. இந்த அருமையான பாகவதத்தை உங்களின் காணிக்கையாக அதிக மாஸத்தில் அளிப்பது அனந்த பலனைத் தருவது மட்டுமின்றி பித்ருக்களுக்கும் உத்தாரத்திற்கும் இது சிறந்த ஸாதனையாகும்.

கன்யாதா$^{3}$னஸஹஸ்ராணி வாஜபேயஶதானி ச
ஸதா$^{4}$ன்யக்ஷேத்ரதா$^{3}$னானி துலாதா$^{3}$னானி யானி ச
மஹாதா$^{3}$னானி யான்யஷ்டௌ ச$^{2}$ந்தோ$^{3}$தா$^{3}$னானி யானி ச
ஸ்ரீபா$^{4}$க$^{3}$வததா$^{3}$னஸ்ய கலாம் நார்ஹந்தி ஷோட$^{3}$ஶீம்

-ப்$^{3}$ரு.நா.25/35-36

ஆயிரக்கணக்கான கன்யா தானங்கள், நூற்றுக்கணக்கான வாஜபேய யாகங்கள், உத்தமமான தானியங்கள் விளையும் நிலங்களின் தானங்கள், துலா புருஷ தானம் (துலாபாரம்) போன்ற எட்டு விதமான மஹாதானங்கள், வேத உபதேஶங்கள் போன்றவை ஸ்ரீமத் பாகவத க்ரந்த தானத்தின் பதினாறில் ஒரு பங்கிற்குக் கூட ஸமம் ஆகாது.

இப்படி அனந்த பலனை அளிக்கும் பாகவத புத்தகத்திற்கு உங்களால் ஆன நன்கொடை அளித்து அனந்த பலன் பெறலாம். மேலும், ஒரு முழு புத்தகத்திற்கு நீங்கள் ஸ்பான்சர் செய்து உங்கள் முன்னோர்களுக்கு காணிக்கையாக சமர்ப்பிக்கவும் வாய்ப்புண்டு. மகன்/மகள் சேர்ந்து நன்கொடை அளித்து தங்கள் பெற்றோர்களின் போட்டோவுடன் சமர்ப்பிக்கவும் அவகாஸம் உண்டு. அந்த புத்தகத்தைப் படிக்கும் அனைவரின் பலனில் உங்களுக்கும் பங்கு உண்டல்லவா? இதுகுறித்து எங்களை தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீமத் பாகவத புத்தகம் அதற்குரிய சார்ட்டுடன், வண்ணப்படங்களுடன் தயாராகிக் கொண்டிருக்கிறது. தேவையான காப்பி அளவே பிரிண்ட் செய்ய இருப்பதால் உங்கள் தேவைக்கு இன்றே பதிவு செய்து கொள்ளவும்.

ரூ. 3000 அளித்தவர்களுக்கு ஏழு புத்தகங்கள் கொண்ட ஒரு செட் புஸ்தகத்தை நாங்களே அனுப்பிவிடுகிறோம்.